ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| இஞ்சு ஒன்றுக்கு 1-0-0. | | |
| சர்க்கார் கோர்ட்டு 2-0-0 | | |

# திராவிடநாடு

| | | |
|---|---|---|
| வருடசந்தா ரூ. 5—0—0 | | |
| ஆறுமாதம் ரூ. 2—8—0 | | |
| தனிப்பிரதி ரூ. 0—1—3 | | |

மலர் 2 | காஞ்சிபுரம் 6—2—44 சுபானு தை 23—ஞாயிறு | இதழ் 47.

தூத்துக்குடி

## சைவ சபையின் தலைவர் உரை.

தூத்துக்குடியிலும் மதுரையிலும் சைவசபைகள் முடிவடைந்தன. பெரிய சைவப்பண்டிதர்களான பண்டித மணி கதிரேசன் செட்டியார் அவர்களும் பண்டிதர் கலியாணசுந்தர முதலியார் அவர்களும் பிரசங்கித்ததலைமை உரையின் சுருக்கமும் படித்தேன். அவைகளைப் பற்றி எனக்கும் சில சொல்லவேண்டியிருக்கிறது. நான் சொல்வது நியாயத்திற்கும் அனுபோகத்திற்கும் ஒத்திருக்கிறதா என்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

தூத்துக்குடி சைவசபைத்தலைவர்பண்டித மணி செட்டியார் அவர்கள் செய்த பிரசங்கத்தில் சைவசமயம் பரந்தநோக்கமும் வேற்றுச்சமயங்களை வெறுத்தொதுக்காமல் ஏற்றுக்கொள்ளும் இயல்புடையது என்கிறார். இவர் சொல்லுவது உண்மைக்கு நேர் விரோதமென்பதை சைவப்புராணக் கதைகள், ஆச்சாரிகள், அவர்கள் சொன்ன தேவாரங்கள்சிவபெருமான் சொப்பனம் சாதித்துச்சீட்டெழுதினது முதலியவைகள் காட்டிக்கொண்டு முன் நிற்கின்றன.

சைவ ஆச்சாரியான சுந்தரமூர்த்திகள் சாதாரண ஒரு பிராமண ஆச்சாரிமட்டுமல்ல; கைலயங்கிரியில் சிவபெருமானின் பள்ளிஅறை நிலைக்கண்ணாடியில்கண்டசிவபெருமானின் அழகே சுந்தரமூர்த்தியாக அவதாரம்பண்ணின சைவ ஆச்சாரி. இவர் ஒரு பெண்ணிற்காகபொய்ச்சத்தியம் பண்ணினர். அதற்குச்சிவபெருமான் உடந்தையாக விருந்தார். இவர்கள் இருவரையும் சைவத்திலிருந்து எடுக்கவோ தள்ளவோவழியில்லை.எடுத்தாலும் தள்ளினாலும் சைவமும் ஓடிவிடும்.சைவக்கடவுளும் சைவஆச்சாரியும்பொய்யும் பொய்ச்சத்தியமும் செய்திருக்கையில்சைவப்பண்டிதர் மணி செட்டியார் அவர்கள் பொய் சொன்னால் சைவத்திற்குத்தான் என்ன குறை? நமக்குத்தான் என்ன ஆச்சரியம்?

சமயத்திலுள்ள மாறுபாடு, நியாயமில்லாமை, கொடுமை, ஒரு கூட்டத்திற்குத் தாழ்வு, ஒரு கூட்டத்திற்கு உயர்வு, ஒரு கூட்டத்தை அழிப்பது பொருத்தமில்லாத ஆபாசப்பொய் முதலியவைகளுக்கு இந்தப்பண்டிதர்கள் காரணமல்லவென்பது எல்லாருக்கும் தெரியும். பொய்யை நம்புகிறார்கள். அவ்வளவோடு நிற்க முடிவதுமில்லை. நவீன உலகத்தில் ஜனத்தின் ஜீவசக்திக்கும் ஜாதியின் நிபந்தனைகளுக்கும் போர்நடக்கிறதென்பதா பண்டிதர்களுக்குத் தெரியும். மனிதனுக்கும் உலகுக்குமுள்ள தொடர்பு விருத்தியாகிறதையும் பார்க்கிறார்கள். சமயமோ பண்டிதர்களுக்கும் மளிகைக்கடையாக விருக்கிறது,சரக்கோ வற்றியும் வதங்கியும் உளுத்தும் செல்லரித்து மிருக்கிறது. வியாபாரமும் வேண்டும். பொய் சொல்லாமலும் முடியவில்லை. என்ன செய்வார்கள். என்றாலும் சிவபெருமான் ஒருவன் உயரத்திலிருக்கிறார் அவர் கருணை முதுகுக்குப் பின்னால் முக்காமுள தூரத்தில் குதித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்வதை நிறுத்துவதில்லை; விஷயத்திற்குப் போவோம்.

உயர்ந்த ஜாதிக்காரர்கள் செய்வது போலநந்தன் என்கிற தாழ்ந்த ஜாதிக்காரனும் செய்துவந்தான். நிஜமான பக்தியுடையவனாகவே ஆகிவிட்டான், சிதம்பரம்வந்தான்.இவனை அக்கினியில் முழுகவைத்து என் உள் சந்நிதிக்கு அழைத்து வாருங்கள் என்று தீட்சதர்களுக்குச் சிவபெருமான் சொன்னதாகச் சொல்லி நந்தனை அக்கினியில் போட்டு எரித்தார்கள். இதோ பிராமணனாக நந்தன் வந்துவிட்டான், என்று சொல்லி ஒரு பார்ப்பானைக் கோவிலுக்குள் கூட்டிக் கொண்டு போனார்கள். நந்தன் சாம்பலானான். பெத்தான் சாம்பனுக்குச் சிவ தீட்சைசெய்து முக்திகொடுப்பது முறை என்று சிவபெருமான் தீட்சதருக்குச்சீட்டெழுதினார் என்கிற பொய்யை உண்டு பண்ணிச், சாம்பான் என்கிறவனையும் நெருப்பில்போட்டு கொளுத்தினார்கள். சாம்பான் பெண்சாதி நியாயத்திற்குவர, முள்ளிச் செடிக்குத் தீட்சைசெய்து மோட்சத்திற்கு அனுப்பினதாக ஏமாற்றுப் பாசாங்குசெய்து அந்தக்கொடுமையை மறைத்தார்கள். ஆகவே, நந்தனும், சாம்பானும் நெருப்பில் வெந்தார்கள். இதைத் தெரிந்த தாழ்ந்தஜாதிக்காரர்கள் சிதம்பரத்தையும் தீட்சையையும் சைவத்தின் பரந்த நோக்கத்தையும் கண்டு பயந்துவிட்டார்கள். நந்தன் சாம்பனுக்குப்பின் இதுவரையிலும் ஒருவரும் வரவே இல்லை. கோவில்களுக்குள்போகச் சிவபெருமான் சொப்பனமும், சிவபெருமான் கைச்சீட்டும் வேண்டியிருக்கிறது. சைவத்தின் பரந்தநோக்கில் இதுவும்

(2ம் பக்கம் பார்க்க)

### இன்ப இரவு.

கவிஞர்.

பாரதிதாசன் எண்ணங்களை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகியவற்றில் பொருத்திக் காண்பிக்கப்படும்.

சேலம் விக்டோரியா சென்ட்ரலில் 5-2-44முதல் நடைபெறுகிறது

தலைமை; சேலம் சேர்மன் இரத்தினசாமி அவர்கள்,

ஒரே இரவில்

இசை ஓரியண்டல்நாட்டியம், பரத நாட்டியம், நகைச்சுவை, நாடகம் [புரட்சிக்கவி] அத்தனையும்.

பிரமுக்கிய நகரங்களில் விரைவில் எதிர்பாருங்கள்.

முத்தமிழ் நிலையம், ஆவினிப்பட்டி, சென்னை.

## சைவ சபையின் தலைவர் உரை.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுதான். இதெல்லாம் ஞானக்கண்ணால் பார்த்தால்தான் தெரியும், ஊனக்கண்ணால் பார்த்தால் தெரியாது என்பார்கள்.

கிருஸ்து சமயம், மகமதிய சமயம் ஒரு அவுன்ஸ் தண்ணியிலும் ஒருவேளைச்சாப்பாட்டிலும் எல்லாத் தீட்சையையும் முடித்து சைவசமய அக்கிரமக்கோட்டையின் வாசல்களை உடைத்து எங்குவேண்டுமானாலும் போங்களென்று செய்து வருவது எல்லாருடைய ஊனக்கண்ணுக்கும் தெரிகிறது. அவர்கள் முத்திக்கும்மோட்சத்திற்கும் அவர்கள் பெருமான் சொப்பனம் சொல்லுவதும் சீட்டெழுதுவதும் வேண்டியதில்லை.

புத்த சமணர்களைவெறுத்துச் சமணர்களைக் கழுவில்போட்டுப் பாடினபாசுரங்கள் பல சிவபெருமானுக்கு அணிகலமாகவிருக்கின்றன. சிவபுராணங்களிலுமிருக்கிறது. அதில் படமும்போடப்பட்டிருக்கிறது. கோவிலில் திருநாளாகவும் நடக்கிறது. அது சிவபெருமானின் கீர்த்தியில் பெரும் கீர்த்தியாகவும் பாராட்டப்படுகிறது. மதுரை மீனாட்சி கோவில் தெப்பக்குளச்சுவரில் சிவசின்னமணிந்த சைவர்கள் திருஞானசம்பந்தருக்கு முன்னால் சமணர்கள் கழுவேற்றி ஆளுக்கொரு தோளைப்பிடித்துக் கழுவாணி உச்சந்தலைக்குமேல் வரும்படியாக அழுத்துவது சித்திரமாக எழுதப்பட்டிருக்கிறது. இப்பொழுது இவைபழுதுபட்டமையால் சீர்திருத்திப் புதுப்பித்திருக்கிறார்கள். முதலிலிருந்த சித்திரம் மேற்சொன்னபடியே.

சிவபெருமான் ஆயிரதேவவருடம் பார்வதியைப் புணர்ந்து குமாரக்கடவுளைப் பெற்றார். குமாரக்கடவுள் திருஞானசம்பந்தராகப்பிறந்து வேதவேள்விக்கு விரோதமானபௌத்தசமணர்களையும் மற்றவர்களையும் அழித்தார் என்பதுதானே சைவத்தின்பெருமை என்று பாராட்டுகிறார்கள். ஆயிரதேவவருடம்சிவபெருமான் களைக்காமல் இடைவிடாமல் போகித்தார். என் உலகத்தில் எங்கே இடம் என்பதை நாம் பண்டிதர்களைக் கேட்காமலே விட்டுவிடுவோம். சைவம் ஜீவகாருணிய சமயமாயிற்றே, வேதவேள்வியைக் குற்றம்சொல்லுகிறவர்களை விரோதிக்கிறார்களோ எதனால், விரோதிக்கிறார்கள்? அப்பொழுது வேதவேள்வி சைவத்திற்கு உடன்பாடுஎன்பதுதானே? வேதம் நான்கும் அங்கம் ஆறும் விரிசடையும்தாங்கி பூணூல்அணிந்து விளங்குகிறார் சிவபெருமான் என்று பல தேவாரம் சொல்லுவதுபோல எல்லாச்சிவபெருமானுக்கும்பூணூல்போட்டுத்தானே இருக்கிறது. வருடம்தவராமல் பூணூல் கலியாணமும் நடக்கிறதே; அம்மனுக்கும் இரட்டைத் தாலிதானே கட்டியிருக்கிறது. சிவபெருமானும் பார்ப்பார்களும் ஒருஜாதியாகவிருப்பதினால்தான் எவ்வளவு ஒழுக்கம்கெட்ட பார்ப்பானாகவிருந்தாலும் சிவபெருமானைத் தொடலாம், பக்கமிருக்கலாம் சைவப்பண்டிதர்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகவிருந்தாலும். சித்தாந்த சாஸ்திரத்தைக்கரைத்துப் படித்திருந்தாலும், மணியாகவிருந்தாலும் மாணிக்கமாகவிருந்தாலும், கலியாணமாகவிருந்தாலும், சுந்தரமாகவிருந்தாலும் அறநெறியென்றும் மறநெறி என்றும் அளந்தளந்து கொட்டினாலும், பிராமண தாசிமக்களும் பார்ப்பார அடிமைகளுமான சூத்திரப் பண்டிதர்களுக்குச் சிவபெருமானின்பக்கமிருக்கும் பந்துத்வமில்லை. பண்டிதமணி சொல்லுவதுபோல இதுவும் சைவத்தின் பரந்த நோக்கம்தானோ? அரசியல் அதிகாரம் கிடைத்தால்தான் சைவத்தை நிலைநாட்ட முடியும் என்று மதுரைசைவசித்தாந்த சபைப்பிரசங்கம் சொல்லுகிறது. பெரிய பண்டிதர்கள் இஷ்டம்போல் எதையும் சொல்லலாம்போலும்! இங்ஙனம்,

**கைவல்யம்.**

---

படத்திறப்பு விழா!

இன்றைக்கு ஒருவிதம், நாளைக்கு மற்றொருவிதம் பேசுவதில் ஸர். ஸி. பி, இராமசாமி ஐயர் மகா கெட்டிக்காரர். சமயோசிதம்போல் வேஷம் போடுவதிலும் அவருக்கு இணை அவரேதான். அவர் தம்மை ஒரு பொதுவுடைமைக்காரன் எனக்கூறிக்கொள்ளுகிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத்தாங்கும் தூண்களில் ஒருவரான—எப்போதும் இராஜபோகங்களிலேயே ஈடுபட்டிருப்பதில் பெருவிருப்புடையவரான ஸர். ஸி. பி, எப்படி பொதுவுடைமைக்காரராக இருக்க முடியுமென்று நமக்கு விளங்கவில்லை.

(பிரசண்ட விகடன்)

---

## திராவிடர் கழகம்.

சேலம் செவ்வாப்பேட்டை திராவிடர் கழக முதலாண்டுவிழா 16–1–44 காலையில், தேவாங்கபாடசாலையில், தோழர் J. S. கண்ணப்பர் தலைமையில் நடைபெற்றது. தலைவர்களின் ஊர்வலமும் நடைபெற்றது. பழயகோட்டைப் பட்டகாரர் திருமகனார் தோழர் அர்ஜுனன் அவர்கள் தமிழ்க்கொடி ஏற்றினார். பெரியார் E. V. இராமசாமி, திருப்பூர் S. R. சுப்பிரமணியம், தனபாக்கியத்தம்மையார் ஆகியோர் பேசினர். தோழர் அண்ணாத்துரை திராவிடநாடு படத்தைத் திறந்துவைத்தார். மாலை, விக்டோரியா மார்க்கட் மைதானத்தில், தோழர் சோமசுந்தரம்அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம்நடந்தது. பெரியார், கண்ணப்பர், அண்ணாத்துரை ஆகியோர்பேசினர்.



திருவத்திபுரம்,

**M. கந்தசாமி.**

திருவத்திபுரம், தோழர் M. கந்தசாமி அவர்கள், வடாற்காடு ஜில்லாபோர்டு அங்கத்தினராக நியமனம் செய்யப்பட்டதைப் பாராட்ட, தேநீர்விருந்தும் பொதுக்கூட்டமும், 30—1—44 மாலை, திருவத்திபுரம் யூனியன்போர்டு ஆபீசில் நடைபெற்றது. மாஜிமந்திரி, திரு. S. முத்தைய்ய முதலியார் C. I. E. அவர்கள் தலைமைவகித்தார். உள்ளூர் அதிகாரிகளும் பிரமுகர்களும் வந்திருந்தனர். மற்றும், காஞ்சிபுரம் தோழர்கள் A. K. தங்கவேலர் C. N. அண்ணாத்துரை, K. புட்டாசாமி ஆகியோரும், மாயவரம் S. V. லிங்கம் குடியேற்றம் அண்ணல் தங்கோ ஆகியோரும், ஜில்லாபோர்டு அங்கத்தினர்களான, M. B. இரங்கசாமி ரெட்டியார், T. S. முத்துக்குமாரசாமி முதலியார், வாணியம்பாடி V. S. விசுவநாதம், அரக்கோணம் M. பக்தவச்சலம் M. L; A, ஆரணி சுகானந்தம், களம்பூர் குப்புசாமி முதலியார், ஆகியமற்றும் பலரும் வந்திருந்தனர். தோழர் கந்தசாமி அவர்களைப் பாராட்டியும், பொதுத்தொண்டின் மேன்மைபற்றியும் தோழர் S. முத்தைய்ய முதலியார், A. K. தங்கவேலர், C. N. அண்ணாத்துரை, S. V. லிங்கம் ஆகியோர் பேசினர். ஊர்வலத்துக்குப்பிறகு, தோழர் S. முத்தைய்ய முதலியார் தலைமையில் ஒருயுத்த ஆதரவுக்கூட்டம் நடைபெற்றது.

## திருப்பூர்.

18—1—44 மாலை திருப்பூர் நொய்யலாற்றங்கரையில் தோழர் S. R. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பெரியார் அவர்களும் அண்ணாத்துரையும் சொற்பொழிவாற்றினர். தோழர் குரு இராமலிங்கம் வணக்கம்வழங்கினார். அன்றிரவு, திருப்பூர் பிரபலவியாபாரி தோழர் சுப்பைய்ய செட்டியார் அவர்கள் தமது மாளிகையில் பெரியார் அவர்கட்கு விருந்தளித்தார். நகரின்முக்ய அதிகாரிகள் அவ்விருந்துக்கு வந்திருந்தனர்.

# தூண்டில்! எச்சரிக்கை!!

பாரதன்.

“வர்ணாஸ்ரமம் ஒழிக” என்ற தலைப்பிலே, கலைப்படிப்பு, ஆரியக்குழியிலே,தமிழரைத் தள்ளக்கூடியதாக இருக்கிறது என்று எழுதினாயே, சர். சண்முகம், தமிழ்க்கலையிலே ஆர்வங்கொண்டிருப்பதால், நல்லது விளையுமேயன்றி நாசமா நேரிடும், விளக்கு, என்று அன்பரொருவர் கேட்டிருக்கிறார். பழய காப்பியங்களைப்படிக்கப்படிக்க, ஆரியதிராவிடப் போராட்ட உணர்ச்சி ஒழியும் என்பது, ஆரியருக்கு நன்குதெரிந்திருக்கிறது. ஆகவேதான், தற்காலப் புத்தறிவுப் பிரச்னைகளைப்பற்றிப் பேசும்போதும் எழுதும்போதுங்கூட, பழய ஏடுகளுடன் அவைகளை இணைத்துக்காட்டுகின்றனர். இரு கருத்துகள் அவர்கட்கு. இரண்டும் இடையூறு உண்டாக்குவனவே! ஒன்று இன்றைய உலகிலே புதிதாக ஒரு அறிவும் இல்லை, பழமையிலேயே யாவும் உள, என்று பேசுவதன்மூலம்,புத்துலகஉணர்வு வாராமல் தடுப்பது. மற்றொன்று, அத்தகைய பழமை உணர்வின்படி நிற்பின், வர்ணாஸ்ரமம் நிலைக்கும் என்பது. இவ்விரண்டும், நாட்டுமக்களை நலியவைத்து, “முகத்துதித்தோரை” முடிசூடா மன்னராக்கும் முறைக்குப் பயன்படுகின்றன. எனவேதான், நான் கலையருவியிலே கவலையுடன் ஆரியநாரை அமர்ந்திருக்கிறது, அதைக் கவனத்தில்வையுங்கள் என்று கூறினேன்,

எந்தச் சந்தர்ப்பத்தையும் நழுவவிடாதே! எதையும் உனக்குச் சாதகமானதாக்கிக் கொள்ளத்தவறாதே! என்பவை, ஆரியரின் இலட்சியம், இரண்டாயிரம் ஆண்டுகளாகவே! இதன்படியேதான், கலையையும் அவர்கள் தங்கள் ஆதிக்கத்தைப்புகுத்தும் கருவியாக்கினார்கள். உணவு கண்முன் ஊசலாடுகிறது என்ற உவகையுடன் துள்ளிக்குதிக்கும் மீனுக்குத் தூண்டிலே தூக்குமரமாகிறது! அதுபோலக் கலையழகு காண்போம் என்றுஎண்ணிப், பழமைமுன் கூத்தாடும் தமிழர், ஆரிய ஆதிக்கத்திலே சிக்கிவிடுகின்றனர். ஒரு சிறு சம்பவம். புத்துலகப் பற்றுக்கொண்ட ஒரு திருவாளரின் திருமனையிலே நடைபெற்றது, கற்பனையல்ல, ஆனால் கண்ணியமான முறைக்காக வேண்டி, பேருக்கு முகமூடியிட்டிருக்கிறேன், உமது மன்னிப்பைஎதிர்பார்த்து.

“வாருங்கோ! நேற்றுமாலை நெடுநேரம் வரை காணோம். எங்கே போயிருந்தீர்கள்?” என்று கேட்டார் புத்துலகப் பற்றுடையார். பழமையாளர் சொன்னார், “பரதநாட்டியம் காணச்சென்றேன். பரமானந்தம்கொண்டேன்.பாத்திரம் முதல்தரமானது.அபிநயம்அபாரம்.கீதம்,லலிதமாக இருந்தது” என்று. புத்துலகப்பிரியருக்கு நடனங்காண ஆவல் பிறந்தது-கலைக்காகத்தான்! கண்டார். “கண்டவுடன் எந்தன் உள்ளம் கொள்ளை கொண்ட கள்வா-” என்ற சகானாபாட்டுக்கு அபிநயம் அழகுறநடந்தது, அம்மையும் கலைக்காகத்தான் அதனை நடத்தினார். இருவரும் தங்களை அறியாமல் கட்டிலறை நோக்கி நடந்தனர், அதுவேறு விஷயம். பிறகு, நர்த்தனத்தத்துவந்தான்நடராஜர், என்று புத்துலகப்பிரியருக்குப் பழமையாளர் புகன்றார். விக்ரகம் வாங்கப்பட்டது, அந்தத்தூக்கிநின்றாடும் காட்சியிலே, கூத்தின் விளக்கங்காணத்தான், வேறு எதற்குமல்ல! காலையிலே காண்பார், கலையழகை எண்ணுவார், கூத்தனின் சிலைமூலம். பிறகு, பழமையாளர், “விக்ரகத்தை வீணாகப்பாழாக்குகிறீர். நீராட்டாது விட்டீரேல், அது பாசிஏறிப்பாழ்படுமே” என்றுரைத்தார். ஆமென்றார் புத்துலகர். அபிஷேகம்என்ற முறையிலே அல்ல, விக்ரகத்தைத் தூய்மையாக வைத்திருப்பது என்ற முறைக்காக, நீராட்டிவரலானார்.

“பளபளப்பான சிலைக்கு ஒரு பட்டுத் துண்டும்கட்டிப்பாருங்கள், அதன்அழகே அலாதிதான்” என்றார் திருவாளர்பழமை. மிஸ்டர்புதுமை, “இது ஒரு பிரமாதமா, கொண்டுவா, கொள்ளேகாலம் பட்டு, வேஷ்டி” என்றார். ‘வீட்டிலே, பறிப்பாருமின்றி உலரும் மலர், உமது அறையிலே மணமூட்டட்டும். அதைப்பறித்து மாலை தொடுத்துக், கூத்தன் சிலையிலே போட்டுவிடுங்கள்” என்றார், பழமை. அதுவும் நடந்தது. ‘உங்களுக்கிருக்கும், வேலையிலே, காலையிலே இந்தக் காரியங்களையெல்லாம் எப்படிச்செய்து கொண்டிருக்க முடியும், யாராவது ஒரு ஐயனை வேலைக்குவைத்துவிடுங்கள்” என்று பழமை யோசனைகூறினார். ஐயரும் வந்துசேர்ந்தார். அவர் தமது வேலையைச் சரியாகச் செய்கிறாரா என்று பார்க்கக் காலையிலே மிஸ்டர் புதுமை செல்லலானார். ஐயர், விபூதிமடலை நீட்டினார். இரண்டொரு வாரங்களிலே “குனித்தபுருவம்” எனும் தோத்திரம்பாடவும், கூத்தனை எட்டநின்றுகும்பிடவும், குடும்பக் கோயில் குருக்கள்தரும் குங்குமவிபூதியைப் பயபக்தியுடன் வாங்கவும், மிஸ்டர் புதுமை பழகிவிட்டார். திருவாளர்பழமை “தீர்த்துக்கட்டிவிட்டோம் ஒருதீப்பொறியை” என்று தமது குறிப்புப் புத்தகத்திலே பொறித்துக்கொண்டார்.

இதுபோலக், கலையிலே தொடங்கி. ஆரியவலையிலே வீழும்வரை பலர் சென்று விடுவதைக் கண்டதாலேயே, நான், “கலையின் பேரால் ஆரியர் நடத்தும் சூது இது, எச்சரிக்கை” என்றுரைக்கிறேன்.

பழய காப்பியங்களைப் படித்துக் கலையுணர்வு பெறுவது, இன எழுச்சியைச் சாகடிக்கும், நச்சு, என்ற மித்திரன் வாசகம், ஆழ்ந்துசிந்திக்க வேண்டியதென்பது என்கருத்து. ஒருவரை மற்றொருவர் அடிமைக்கொள்ள, வசியப்படுத்த, வீழ்த்த, வகைபல உண்டு, முறைபலஉண்டு. வீரர் வேல்கொண்டு போரிடுவர், தமது ஆற்றலையே, ஆதிக்கஅளவுகோலாகக்கொண்டு. வீரமற்று வஞ்சக உள்ளங்கொண்டோர், மறைந்திருந்து தாக்குவர், மாற்றானை மாய்த்திட எம்முறையும் ஏற்றதே என்று கூறுவர், மராமரங்களுக்குப் பின்புறமிருந்து வாலியைக்கொன்ற ஆரிய இராமன்போல! நண்பனாக நடித்து நயவஞ்சகத்தால் காரியத்தைச் சாதிக்கும் கயவரும் உண்டு! எதிர்ப்போனின், உடன்பிறந்தாரையோ, ஏவலரையோ, விலைக்குப்பெற்று, விபீஷணாஸ்திரத்தால் வீரனை வீழ்த்தும் வகையுமுண்டு. மாயமொழி பேசியும் மாற்றானை மாய்ப்பதுண்டு! எதிரியின் ஏமாளித்தனத்தைத் தெரிந்து அவனைச் சாய்ப்பவருமுண்டு, உலகம் பலவிதம். கரியைப் பிடித்திழுத்துக் கரகரவெனச்சுழற்றி அடிக்கும் வீரனுலும், காமவல்லிகளின் கடைக்கண்பார்வையாலோ, புன்சிரிப்பெனும் பாணத்தாலோ, அதரமெனும் அஸ்திரத்தாலோ, அடியற்றநெடும் பனையாவதுமுண்டு. தேவர்கள் யாவரையும் தீர்த்துக்கட்டும் மாவலிபெற்ற அசுரர்கட்கு, அமிர்தம்தந்திடின், அமரர் உலகு அசுரஉலகாகுமென்றெண்ணிய, அரி, அழகி உருக்கொண்டு ஆடிப்பாடி அசுரரை ஏய்த்தசூது, ஆண்டவன் லீலையாகப் போற்றப்படும் இந்நாட்டிலே, வேறுபலர், மோகினிரூபம், வீரரை வீழ்த்தும் வேல், என்றுகொண்டதிலே ஆச்சரியப்படுவதற்கில்லை. “சர்வவல்லமையுள்ளவரே, சாகசத்தைச் சக்கரமாகக்கொண்டே அசுரரை சம்ஹரித்தார் என்றால், சாதாரணமக்கள், அம்முறையைக் கையாளாமல் இருப்பரோ! இங்ஙனம், ஒருவரை ஒருவர்வீழ்த்த பல்வேறுவகையும், பல்வேறு கருவியும்இருத்தல் போலவே, ஒரு இனத்தை மற்றோர் இனம் அடக்கக்கையாளும் முறையும், பலவகைப்படும். தீப்பந்தமும் திடீர்த்தாக்குதலும் ஒரு முறையாக அமைந்திருக்கிறது! படையில் கலகமூட்டுவதும் பாசறை கெடுத்தலும், சிலசமயம், கையாளப்பட்டன. அடுத்துக் கெடுப்பதும், அணைத்து அழைப்பதும், சிலசமயம் நடந்ததுண்டு. உலகிலே ,இதுபோல, இனப்போரின்போது, ஒவ்வோர் விதமான முறையைக்கையாண்டிருக்கிறார்கள். ஆரியஇனம்எப்படைகொண்டும்திராவிடரை வீழ்த்தவில்லை, அப்புறப்படையினருக்குப் போரிடும் ஆற்றலே இருந்ததில்லை. திராவிட இனம், ஆரியதாசராகமாறிட ஆரியர் கையாண்டமுறை, கலையருவியிலே திராவிடரைத்தள்ளியதுதான்! எமது

6ம்-பக்கம் பார்க்க.

# திராவிட நாடு

காஞ்சி 6—2—44 ஞாயிறு


# கையில் ஊமையர்!

★

அவன் ஓர் ஊமை! கையுமில்லை!! அவனைக் காவலுக்கு நிறுத்தினான், கருத்துக் குருடனொருவன். எங்கே, எதற்கு? பாறையிலே! அதன்மீது வைக்கப்பட்ட வெண்ணெய் உருண்டைக்கு!! வேளை எத்தகையது? கடும் வெயில்நேரம். பேச்சிழந்துக் கையுமிழந்தவனுக்குக் கண் மட்டும் கெடவில்லை! பார்த்தபடி இருக்கிறான், வெண்ணெயை. கதிரவனின் ஒளி படப்பட, வெண்ணெய் உருகி வழிந்து ஓடுகிறது, பாறைமீது. விளக்கிக்கூறவோ வாயில்லை, ஊளையிடுகிறான்! வெப்பத்தால் வெண்ணெய் உருகி ஓடிப் பாறையிலே பாழாவது தெரிகிறது, வெண்ணெயை வழித்தெடுத்து வேறிடம்கொண்டு செல்லவோ, கருத்துண்டு, கரமில்லை!! கரமுள்ளவரிடம்கூறி, வெண்ணெயை வேறிடம் எடுத்துவைக்கச் சொல்லவோ எண்ணமுண்டு, எண்ணத்தை எடுத்துரைக்கவோ, வாயில்லை! என்செய்வான், "கையிலூமன்"!!

"பசி! பசி! பஞ்சம், அகவிலை, நோய், அவதி!" என்றோர்புறம் அலறலும் அழுகுரலும் கேட்கிறது.

"கொள்ளை இலாபம்-கோடீஸ்வரனானான்-கோபுரஉயரத்துக்கு மாளிகைகட்டினான்"—எனமற்றோர் புறம்பேசுவதும் கேட்கிறது.

"பொருள்இல்லை, பண்டமில்லை, அரிசி இல்லை, நெய்இல்லை, விறகுஇல்லை, நவதானியம்இல்லை"-என்ற விசாரம் ஒருபுறம், மற்றோர்புறத்திலோ, "100001 காணிக்கை, 10001 பாதகாணிக்கை, 101 ரூபாய் பிட்சை என்றபேச்சும், பத்து வண்டி சம்பாநெல், இருபதுடின் நெய், பத்து டன் கட்டை, நவதானியம் நாற்பது மூட்டை வந்துஇறங்கும் வைபவமும் நடக்கிறது!

பஞ்சையின் நெஞ்சுபதறுகிறது, படாடோபக்காரனின் பகட்டுபரவி வீசுகிறது! இந்நிலையால், நொந்திடுவோரிலே நெஞ்சறிந்ததைக்கூறஇயலா, நாக்கிழந்தார் ஒருபகுதி, நாவிருந்தும், இந்நிலையைத் திருத்திஅமைக்கும் நோக்கிருந்தும்,செயலாற்றும்திறமற்றோர் வேறோர்பகுதி,எனவேகண்டு கவலைகொண்டு, உளைச் சேற்றிலேசிக்கி உயிர்வாதை அடைகின்றனர் பலகோடிமக்கள்.

பாறையிலே வெண்ணெய் பாழாவதைப் பார்த்திருந்தும், கையில்லாத ஊமை, காரியமேதும் செய்யாதிருந்திடல்போலத்தான், பேதத்தால்விளையும் பெருந்தீங்கினைக்கண்டும், கூறவும் குறைதீர்க்கவும் முடியாதநிலையிலே, இங்கு, கையில் ஊமையர் உள்ளனர். பொருள் அழிவைத்தடுக்கவோ, புத்தியை அரித்திடும் புல்லுருவியைப் பெயர்த்தெடுக்கவோ, முடியாது,பேசவுமார்க்கமின்றிப் பிதற்றியோ புலம்பியோ வாடுகின்றனர் நம்மக்கள். ஊமையன் கண்முன்உருகிடும் வெண்ணெய்போல, இவர்கண்முன்பே, செல்வமும் அறிவும் பாழாக்கப்படுகிறது. அதைக்கண்டும் தடுக்கும்வகையற்று வதைகின்றனர். கையில் ஊமைகள் தொகைபெரிதாக உள்ளவரையில், பிறர் பொருளைச் சூறையாடிச் சுகம்பெறும் போகிகளும், மற்றவர்வாழ்க்கையைமிதித்துத் துவைத்து, அதனையே தமக்குவாசமாகக்கொண்டுவாழும் வன்னெஞ்சர்களும்,வாகையுடன்வாழத்தான்செய்வார்கள்! நாடெங்கும்வேதனைக்குரல்!உணவுப்பொருள்முடை! மக்கள் யாவருக்கும் மனவாட்டம்! மனைகளிலே, விறகில்லா வேதனைத்தீ, பஞ்சத்தைச்சுடாக்கிப்பருக அளிக்கும்நிலை. இதேநேரத்திலே, யமுனை ஆற்றங்கரையிலே வேதஒலி, அந்த ஒலி குறையாதிருக்கவும், பசி அலைமோதாதிருக்கவும், உணவுப்பொருள், குவியல் குவியலாக!! வேதியக்கூட்டம், வேள்விக்காக! நூறு அக்னிக்குண்டமாம், அதைச் சுற்றிலும் பூசுரக்கூட்டமாம், இதற்குச் செலவு 13 இலட்சமாம்!! 1000 மணங்கு நெய்! 5000 மணங்கு சமித்து இவைகளைப் பொசுக்க 1500 ஆரியப் புரோகிதர்!!

புதிய புதிய பர்ணசாலைகள் கட்டப்பட்டு, ஓமகுண்டங்கள் வெட்டப்பட்டு, வண்டி வண்டியாக விறகு குவிக்கப்பட்டு, விலையுயர்ந்தபண்டங்கள் குண்டங்களிலேகொட்டப்பட்டு, மகாயாகம்ஒன்று, நடக்கிறது, இதற்கு நாலு சங்கராச்சாரிகள், பிரசன்னமாம்! வங்கத்திலே மக்கள் மடிந்தாலென்ன, சேரன்தங்கிய சீமையிலே சீர்கெட்டாலென்ன, பங்காசிக்காலமாக இருந்தாலென்ன, பஞ்சம் தலைவிரித்தாடினாலென்ன, கையில் ஊமையர் நிறம்பியஇடத்திலே, அவர் கண்முன்பே, புல்லர்கள் பொருளைப் பாழ்செய்கின்றனர், புலம்பவும் உளறவுமன்றி, கையிழந்த ஊமையால் வேறென்ன செய்யமுடியும்! நாட்டுச் செல்வத்தைக் காத்திடும் பொறுப்பு, இந்தக் கையில் ஊமைகளிடமிருக்கிறது! சர்க்காரோ, குறுக்கிடமாட்டார்கள், மதவிஷயத்திலே தலையிடோம் என்று மகாராணியார் கூறிவிட்டார்கள்!! உலகோ தடுக்காது, இப்படி ஒரு உன்மத்தம் பிடித்த நாடு, வேடிக்கைப்பொருளாக இருக்கட்டும் என்றேசும்மா இருக்கும், மேயோ போன்றாருக்கு எழுத்தோவியத்துக்குப் பயன் படட்டும் என்றுமிருக்கக்கூடும். எல்லாம் அறிந்த இந்த நாட்டிலே, செல்வத்தைச்செல்லாய் அரிக்கும் செயலென்னமோ, தங்குதடையின்றி நடக்கிறது! பெருமையின் சிகரம்!! குணக்குன்று!! அறிவின் உச்சாணி இதோ, இந்தப் பாதகண்டந்தான், சந்தேகமா,உங்கட்கு?

மமதையும் மடத்தனமும், மக்களைப் பற்றிக்கவலையின்மையும் அறிவினிடம் ஒத்துழையாமையும் எவ்வளவு ஊறிப்போயிருந்தால், உலகு இன்றுள்ள நிலையிலே, ஊர்இன்று படும்பாட்டிலே, ஏழை அழுதகண்ணீர் ஆறென ஓடுகையிலே, இந்தஅர்த்தமற்ற, நேரத்தை, நினைப்பை, பொருளைப் பாழாக்கும் செயல் நடக்கும், என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம். துயரால் துடிக்கும் மக்களுக்குப் பயன்படுத்த வேண்டிய பண்டங்களைப் பாழாக்கும், ஈரமற்ற நெஞ்சர்கள், நெய்யை நினைப்பிலுங் கொள்ளமுடியா மக்கள் நிறம்பிய நாட்டிலே, நெய்யைநெருப்பிலே கொட்டிடும் கொடுஞ்செயலினர், ஏழைஅழுதகண்ணீர்கண்டும்இரக்கமில்லா இத்தீயர்கள், உள்ளனரே,இவரைஅடக்குவார் இல்லையே!! பல இலட்சம் பாழாகிறதே, பஞ்சகாலத்திலே! யாகமாமே, மகாயாகம்!! உலகுக்கே க்ஷேமமாம் இதனால். இந்த உளறுவாயுரை கேட்டு அறிவுலகம் பொருக்கிறதே, என்னஅதிசயம்!! நூறு அக்கினிக்குண்டங்களாம், அதன் பயன் அமோகமாம்!! என்ன மதியீனம், எவ்வளவு நெஞ்சறிந்தபொய்! ஆயிரமாயிரம் அக்கினிக்குண்டங்கள் இருந்த அந்த நாட்களிலேதானே, சுயாட்சி சூறையாடப்பட்டு, வேற்றுநாட்டானுக்கு இந்நாடு வெள்ளாட்டியாக்கப்பட்டது. வேதஒலி விண்ணைமுட்டியவேளையில்தானே,வேலைதேடிவந்த வெள்ளைக்காரகிளைவின்வேட்டுச்சத்தம், நந்தம்நாட்டினிலே கேட்டது. அன்று, அடிமைத்தனம் வந்ததைத்,தடுக்காத, அக்னிக்குண்டமும்அதனருகேஅமர்ந்துஅங்கத்தைவளர்க்கும் தொங்குவயிறினரும், இன்று, நூறு அக்னிக்குண்டம் அமைத்து, என்ன சாதிக்கப்போகிறார்கள்!! ஏனோ, நமது மக்கள் இவைபற்றிய சிந்தனையின்றி உள்ளனர்! சிந்திப்போரும், கையில் ஊமைகளாகத்தானே உள்ளனர்! யமுனைக்கரையிலே மட்டுமா, பல்வேறு இடங்களிலே நடக்கிறது, இத்தகைய பாழும் விழாக்கள். கும்பாபிஷேகங்களுக்கும், கொட்டுமுழக்குடன் கூத்துக்கும் குறைவில்லை! ஜீவனோபாயத்துக்குமார்க்கமின்றி ஜனங்கள்வாடிடகோயில் ஜீர்ணோத்தாரண வேலைகள் நடந்தபடி உள்ளன. பட்டினிப்பட்டாளம் பரதவிக்கும் வேளையிலே, பல்லக்கிலே, சங்கராச்சாரிகள் பவனி வருவதும், பட்டினப்பிரவேச விழாவிலே தம்பிரான்கள் களிப்பதும், நடந்தவண்ணம் இருக்கின்றன. இந்நடவடிக்கைகளிலேஈடுபடுவோருக்கு இரக்கம் இல்லை, இதைக்கண்டு வேறுபல வேலைகளிலே மனதை அலையவிடும் அறிவாளிகளுக்கோ ரோஷமில்லை, பெரும்பாலான மக்களுக்கோ பேச்சு'

# மணிமாலை

★

தனித்தனியே ஒளிவிடக்கூடிய மணிகளை, மாலையாக்கினுல் ரம்மியம் அதிகப்படுவதுடன், பயனும் அதிகம்! மணிக்குக் கூறுவது மலருக்கும் பொருந்தும். மாலை போன்றது, ஒரு இயக்க அமைப்புமுறை, மணிபோன்றது, அதிலேகோர்க்கப்படும் தோழர்களின் திறமையும் தொண்டும். தமிழர் சமுதாயத்திலே, ஒளிவிடுமணி பல உண்டெனினும், தொடுத்துமாலையாக்கிப்பயன் காணும் நிலையில்லை. இதனுல் உண்டாகும் நஷ்டத்தைச் சொல்ல வேண்டியதேயில்லை. கட்சிக்காக எக்கஷ்டமும் ஏற்றுக்கொள்ளும்இயல்புபடைத்த மணிகள், ஆங்காங்கு சிந்திச்சிதறிக் கிடக்கின்றன. வறுமை எனும்வன்னெஞ்சனின் காலடியால் மிதியுண்டு, குடும்பம் எனும் குளவியால் கொட்டப்பட்டு, உடலமும் உள்ளமும் ஒருங்கே சுருங்கித், தேய்ந்துபோனவர் தொகை, நெஞ்சை நோகவைக்கும் அளவினது. ஆர்வமும், அதற்கேற்ற ஆற்றலுமிருந்தும், பயன்படுத்தமுடியாத நிலையினுல், மங்கிக்கிடந்தும், மங்கிக்கிடப்பதால் மாசிபடிந்தும், பாசமிழந்தும் உள்ளவர்கள் அநேகர். கிராமங்களிலே பிரசாரம் நடத்தவேண்டும்—தொடர்ச்சியாகப் பிரசாரம்இருத்தல்வேண்டும்—கட்சிக் கொள்கைகளை விளக்கி, வீணர்உரைகளை விரட்டியடிக்க வேண்டும்—எங்கே இருக்கிறுர்கள் இவைகட்கு ஏற்றதோழர்கள் என்று பேசிடும் தளபதிகள் பலர்! அவர்களின் தேர்தல் காலச்செலவோ அபாரம்! சாதாரண காலத்திலே கட்சிச்சாகுபடிக்காகச்செலவிடவோ அவர்கட்கு மனமில்லை! இந்நிலையிலே மணிமாலை அமைய இங்கு மார்க்கமில்லை.

இக்காலை, வாலிபஉலகிலே, குறிப்பாக மாணவ உலகிலே, பூத்துள்ள புத்துலக ஆர்வமும், புரட்சிமனப்பான்மையும்,பூசுருக்குப்புதியதோர் ஆபத்து, அதேபோதிலே, தமிழருக்குப்புதியதோர் சம்பத்து! இனஎழுச்சியும்கொள்கை உறுதிப்பாடும், பேச்சுத்திறனும் பணியாற்றும் பண்பும், மக்களிடை பழகும் மாண்பும் வாழ்க்கையை உல்லாசஓடமாகக்கொள்ள வேண்டாமென்று வெறுத்திடும் போக்கும் கொண்ட வீரவாலிபர்கள், பலர்! அவர்களின் உழைப்பு, தமிழ்க்கழனியின் வரட்சியைப் போக்கி, வளத்தை ஊட்டிடும் என்பதுதிண்ணம். ஆனுல் அந்தமணிகள், எற்கனவே மனமுடைந்து, மனையிலே இருளும் வாழ்க்கையிலே மருளும் கொண்டு வதையும். தோழர்களுடன்,கூட்டுத் தோழாக இருக்கவேண்டிய கோர நிலைமை, தமிழகத்திலே, நீடிக்குமானுல், இன்று செழித்துள்ள ஆர்வத்தால் சிறிதும் பயனிராது. ஆங்காங்குள்ள தளபதிகள் முன்வரவேண்டும், இத்தகைய கட்சி உழைப்பாளர்களை ஆதரித்து,அணிவகுப்பாக்கி, ஆரியக்கோட்டையினைத் தாக்கித் தகர்க்கலாம். வட்டாரத்துக்குப் பதின்மர் முயன்றுல், இருவரைக்கட்சித் தொண்டாற்றும் பணிபுரியச்செய்யமுடியும்-செலவு தாங்கக்கூடாததாக இராது. தெனுலிராமன் பூனைக்குப்பால் காட்டிய கதைபோலத், தேர்தல் காலத்திலே கண் மண்தெரியாத செலவுசெய்து அலுத்துப் போகும் அன்பர்களுக்குப்பிறகு, கட்சி என்ற பெயர்கேட்கும்போதே, செலவு என்ற கிலிபிறந்து விடுகிறது. திடீர் வெள்ளம், பயிரை அழிக்குமேயன்றிச் செழித்திடச்செய்யாது. பருவத்தே நீர் பாய்ச்சிட உதவும் வாய்க்காலே வயலுக்கு உறுதுணையாக அமையும்.அஃதேபோலத் தேர்தல் காலத்துப்பெருஞ் செலவு,பயன்தராது, பிரசாரப்பொறியை அமைக்கச் செலவிடுவதே பயன்தரும். பணம் இருக்கிறது, பணத்தைச் செலவிடும் பண்பினரும்உள்ளனர்,பணமெனும்துணையின்றிப் பாழ்படும் தொண்டர்பலர் பாதவித்திருக்கின்றனர். இவைகட்கிடையே தொடர்பு இல்லை! எனவேதான், கொள்கை கோபுரம்போல் உயர்ந்ததாக இருப்பினும், குப்பைமேட்டிலே தமிழர் சமுதாயம் குடிஇருக்கவேண்டி இருக்கிறது! இந்த நிலைமையை நன்குணர்ந்து, நல்லோர் நற்காரியம் புரிதல்நன்று, நாட்டுக்கு, அவர் தம் இனத்துக்கு! இந்தமனப்பான்மை தோன்றுமுன்னம், மணிகள் பல ஒளிவிடினும், மகிழ்ச்சியினூடே மன வருத்தமும் பிணைந்தநம்மை வாட்டுவதாகஇருக்கிறது.சென்ற திங்கள்,திராவிட மாணவமணிகள் மன்றமேறி முழக்கமிட்டு, மதிப்பும் பரிசுகளும் பெற்றனர், என்ற செய்திகேட்டோம், மகிழ்ந்தோம். தீட்சதர்கள் திருஉலாக்காட்சி நடத்தும் தில்லைத் தலத்திலே, அண்ணுமலைப் பல்கலைக்கழகத்திலே, படித்துவரும், தோழர்கள் நாராயணசாமி, அன்பழகன், எனும் நமது நண்பரிருவர், பெங்களூர்சென்று சொற்பொழிவுப் போட்டியிலே கலந்து, பரிசுபெற்றனர். மகாமகக்குளமகிமையும், யுகயுகமாக ஆள்பவர்நாம் என்ற மமதையும், நெஞ்சிலே குடிகொண்ட ஆரியர் வாழும் குடந்தையிலே, தோழர்கள் இதுபோலவே, சொற்பொழிவுத் திறனை விளக்கி, விருதுபெற்றுர். ஆறும் காடும் நிறைந்ததுடன் சீரும் பேரும் மிகுந்த வடாற்காடு வட்டாரத்திலே வேலூரிலே தோன்றிய, தோழர்ஜெனூர்த்தனம் எனும் நம்தோழர், சென்னையிலே வாகைசூடினுர், சொற்பொழிவுப்போட்டியிலே. இவைமிகப் பிரமாதமா என்று ஆரியபுரியினர் கூறுவர், ஆனுல் கூறுது சிந்திப்பதோ வேறுக இருக்கும், "கலியின்கூத்தோ! காலத்தின்கோலமோ! எப்படியோ இந்த ஆரிய வைரிகள் புகழ்பெறுகிறுர்கள்! இதனுல், யாது கேடுசம்பவிக்குமோ நமது சமூகத்துக்கு" என்று சிந்திப்பர். பேச்சாளராக சில தமிழர் முதலிடம் பெறுவதற்கும், நாசம் ஆரிய ஆதிக்கத்துக்கு வருவதற்கும் யாது சம்பந்தம், என்று, கேட்பர், அன்பர்கள். சம்புகனின் தவத்துக்கும் பார்ப்பனச் சிறுனின் சவத்துக்கும் சம்பந்தம் இருந்ததாமே, இராமராஜ்யத்திலே அதுபோலத்தான் ஆரியம் இன்றும் கருதும். ஆரியருக்குக் கவலையோ கிலியோ பிறக்கட்டும், பிறவாதிருக்கட்டும், நமக்குக் கவலையில்லை. நாம் மகிழ்கிறேம், பாராட்டுகிறேம்,அத்தோழர்களையும், இன்னும் இதுபோல, நற்திறனுடன் விளங்கும் தமிழ்வாலிபர்களையும். பாராட்டும்போதுதான், நமக்கு, இந்த மணிகளைக்கோர்த்து மாலையாக்கித் தமிழகத்துக்குச் சூட்டிடலாகாதா, இவ்விதமான வாலிபர்கள்வாழ்க்கையிலே, வறுமையோ வரட்சியோதாக்கி, அவர்தம் திறமை, தமிழகத்துக்குப் பயன்படாது போகும், நிலைமையை உண்டாக்குவது, தமிழர்நலனில்நாட்டமுள்ள தலைவர்களுக்கு அழகாகுமா, இத்தோழர்களும் இவர்போன்றுரும், தமிழர்தொண்டுபுரியும் மனவளம் பெற்றுள்ளனரே, இந்த வாய்ப்பை உபயோகித்துகொள்ள, வகைஉண்டா, இனியேனும், என்று கேட்கிறேம். எவ்வளவு பயன்தரும், இத்தகைய தோழர்கள் மணிமாலையாக்கப்பட்டால்! ஆரியம் அலறிஓட, அவர்கள் தமதுஅறிவை ஆற்றலை, நேரத்தைச் சக்தியைச் செலவிடுவரே, அவர்களைப்போன்றவர்களைக் கட்டிக்காத்துப் பயன்படுத்திக் கொள்ளப், பண்புடையதளபதிகள், முன்வரக்கூடாதா என்று கேட்கிறேம். மணிகளைக்கொண்டுமாலைஅமைக்காவிட்டால், மணிகள் சிதறிப்போவதன்றி வேறென்ன நடக்கும். வாழ்க்கைக் கடலிலே வீழ்ந்து, குடும்பப்பாறையிலே மோதுண்டு, அறிவுத்தோணிகள் சுக்குநூருகின்றன! இந்த அழிவுக்கரையோரத்திலே, அமர்ந்துகொண்டு, யாரால்தான் தமிழரசு நாட்டமுடியும்!! இனியேனும், தமிழர் தலைவர்கள், பணிபுரியும் பக்குவம் பெற்ற தோழர்களைத் தக்கமுறையிலே, பயன்படுத்தித் தமிழ்ப்பண்ணை தழைக்கச் செய்யவேண்டுகிறேம். எவ்வளவோ அலட்சியம், எதிரிகளின் எதிர்ப்பு ஆகியவைகட்கிடையேயும், தமிழ் வாலிபர்களிலே சிலராவது, மணியெனவிளங்குதல்கண்டு, பாலைவனத்து நீரோடைகள் போன்ற அவர்களைப் பாராட்டுவதிலே நாம் பூரிக்கிறேம். தமிழர் சமுதாயம் விடுதலைபெற, இவர்தம்தொண்டு பயன்படுமாக! இவர்தமைப் பயன்படுத்தும் பண்புதமிழகத்திலே தோன்றுமாக!!

---

## ரஷ்யராஜ்.

காஞ்சித்தோழர் G. சீனிவாசன் அவர்களின் ஆண்மகவுக்கு "ரஷ்யராஜ்" என்ற பெயர்சூட்டியதன் பொருட்டு "திராவிட நாடு" இதழிற்கு ரூ. 5—0—0 நன்கொடை அளிக்கப்பட்டது.

★ **11—2—44** ★

அரசனுக்கு, இளையராணிமீது அளவற்ற ஆசை! இளையராணிக்கோ, குதிரைக்காரக்குறு நகை அலங்காரன்மீது மட்டற்றமோகம்! அந்தஅசுவபாலனுக்கோ நாட்டியமாடிடும் நளினிமீது தான் அமோகமான பிரேமை!

'ராஜாபர்த்ருஹரி' எனும் ரம்மியமிக்க நாடகத்தின் சுருக்கம், மேலேதரப்பட்டது. அதுபோல, நமக்கு முத்தமிழ் மீது பற்று; முத்தமிழ் கற்ேருருக்கோ, ஆரியத்திடம் பக்தி, ஆரியத்துக்கோ, தமிழரை அழிப்பதிலே அபாரப் பிரியம்.

பத்ருஹரி, குமஸ்தாவின் பெண், மேனகா, போன்ற நாடகங்களால்நாட்டினரை மகிழ்விக்கும் M.S.B.S. சபையின் (T.K.சண்முகம் சகோதரர்களின் நாடக கம்பெனி) நகைச்சுவை நடிகர் தோழர் சிவதாணுவின் முயற்சியால், இத்திங்கள் 11ந்தேதி, சர். R. K. சண்முகம் தலைமையில். ஈரோட்டில் நாடகக்கலை அபிவிருத்தி மாநாடு நடைபெறுகிறது. முத்தமிழில் ஒன்றும்நாடகத் தமிழ்,நாட்டினருக்குப் பயன்பட வேண்டும், என்பது, நல்லறிவும் நன்னேக்கமும் கொண்டவர் குறிக்கோள்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாலும், ஆரியம் வளர்க்கப்படுவது, அதிலும் தமிழரால் வளர்க்கப்படுவது, அதிலும் தமிழர் என்ற பற்றுகொண்டவர்களால் வளர்க்கப்படுவது, வேதனையூட்டுகிறது.

புராணநாடகங்கள், ஆரியத்தை வளர்க்கின்றன, மக்களின் மதியைப்பாழாக்குகின்றன, தன்னம்பிக்கைக்குத் தளர்ச்சி தந்து, அடிமைப்புத்தியைப் புகட்டுகின்றன. புராண நாடகங்களைக்கண்டு மக்கள் கருத்துக்கெட்டுவிட்டனர்.

இந்நிலையிலே, நாடகக்கலை அபிவிருத்தி மாநாடு நடைபெறுகிறது. நாட்டுக்குத் தேவையான, ஆரியநோயை அழிக்கக்கூடிய, அறிவுவளர்ச்சிக்கான தீர்மானங்களை, ஈரோட்டிலே, பெரியாரின் கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள, முத்தமிழ் நுகருவோர் கழகம், நாடகக் கலைமாநாட்டினருக்கு அனுப்பி இருக்கிறதறிந்து மகிழ்கிறோம். நாடகக்கலை மாநாட்டிலே, நடிகரின் சிரமங்கள், சர்க்கார் நாடகத்துறைக்குச் செய்யவேண்டிய உதவிகள், செல்வவான்கள் நாடகக்கலைக்குச் செய்யவேண்டிய உபகாரம், தமாஷா வரியால் வரும் தொல்லை,முதலியவைபற்றிமட்டும்பேசிப் பிரிந்திடுவது, கலை அபிவிருத்தியுமாகாது, காலநிலைக்கு ஏற்றதுமாகாது.

நாடகக்கலையால், பயன் என்ன ஏற்பட்டது, என்ன ஏற்படவேண்டும், அது இனியும் ஆரியத்தின் கங்காணியாகஇருக்கப்போகிறதா, அல்லது, அறிவுத்தூதனாக இருக்க இசைகிறதா என்ற பிரச்சனை, மேற்படி மாநாட்டிலே பேசப்படவேண்டும், முடிவுசெய்யப்படவேண்டும்.

புராண நாடகங்களால், சமுதாயம் கெடுவதை அங்கு எடுத்துப்பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கவேண்டும். தமிழன் என்ற உணர்ச்சி இப்புராண நாடகங்களால் அழிந்துவருவதைக்கூறவேண்டும். நாடு சமூக சீர்திருத்த நாடகங்களையே விரும்புகிறது என்பதை எடுத்துரைக்க வேண்டும். நாடகக்கலை அபிவிருத்தி, இவ்விதமாக இருக்கவேண்டும் என்பது கூறப்படவேண்டும். இதற்கேற்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டும்.

ஆகவே, தமிழ்வீரர்களே! முத்தமிழ் நுகரும் தோழர்களே! ஈரோடு சென்று மேற்படி மாநாட்டிலே, தமிழரின் கருத்தை எடுத்துரைத்து, மேற்படி மாநாட்டினை, ஆரியம் பலிகொள்ளாதபடி பாதுகாத்து, மேற்படி மாநாட்டின் விளைவு வேதியபுரிக்கு விருந்தாகஅமையாதிருக்குமாறு, மாநாட்டின்போக்கை அமைத்து, தக்கதீர்மானங்களை நிறைவேற்றக் கோருகிறோம்.

தமிழர் இயக்கத்தோழர்கள் பலர், வருகின்றனர். வாருங்கள், ஒன்று சேருங்கள், கருத்தினைஎடுத்துக்கூறுங்கள், கலை, காலவேகத்தை இனியேனும் உணரட்டும்!

சென்னை ஜில்லா

# ஜஸ்டிஸ்கட்சி மாநாடு.

[திராவிடர் கழகம்]

**13—2—44** ஞாயிறு காலை **10**-மணிக்கு

கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள

## சௌந்தர்ய மஹாலில் ஆரம்பமாகும்.

தலைவர்: தஞ்சை நகராண்மைக் கழகத்தலைவர், ராவ்பகதூர்,

அருளானந்தசாமி அவர்கள்,

திறப்பாளர்: தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவர்

பெரியார் ஈ. வே. ரா அவர்கள்,

கொடியேற்றுபவர்: திருமதி

இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள்,

திராவிட நாட்டுப் படத்திறப்பு: தோழர்

C. N. அண்ணாத்துரை M. A.,

சர். செல்வம் படத்திறப்பு: திருமதி

C. R. சௌந்தரியம்மாள் அவர்கள்,

தோழர் பாசுதேவ் படத்திறப்பு: தோழர்

S. நடேச முதலியார் அவர்கள்.

மாநாட்டில் தீர்மானங்கள் கொண்டுவர விரும்புவோர் 10-2-44ந் தேதிக்குள், காரியதரிசி, 2/45, முத்துமணிசெட்டித்தெரு மண்ணடி சென்னை, என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

மாநாட்டிற்குக் கட்டணம் அணா 4. ஒவ்வொரு வட்டத்திலுமுள்ள நமதியக்கத்தோழர்களிடம் கிடைக்கும்.

டி. சண்முகம்,
(ஜில்லாபோர்டு தலைவர் செங்கற்பட்டு)
வரவேற்புக் கமிட்டித் தலைவர்.

K. சிவஞானம்,
விளம்பர அதிகாரி.

### திருமண அழைப்பு.

7—2—44 திங்கட்கிழமை காலை,

எனது மகள் செல்வி **பத்மாவதிக்கும்**,

திரு. வீ. தர்மலிங்க முதலியார்
மகன் செல்வன், **கன்னியப்பனுக்கும்**,

காஞ்சிபுரம் கோட்றும்பாளையம் 37-நெ. இல்லத்தில் தோழர் T. **சண்முகம்** அவர்கள் தலைமையில்திருமணம் நடைபெறும்.

தங்கள் அன்புள்ள,

**மு. பாலசுந்தர முதலியார்,**
முருகன் & கோ, ஜவுளி வியாபாரம்,

மில்லை, கையுமில்லை, மூச்சும்முழியும் மட்டும், முன்னது சுருண்டபடியும் மற்றையது இருண்டவண்ணமும் இருந்திடக் காண்கிறோம். இப்படியும் ஒரு நாடா! இதற்குப்புண்ணிய பூமி' என்ற பெயர் ஒரு கேடா! பொருளைப் பூசுரரின் ஆபாசத்திருவிளையாடலுக்குக் கொட்டி அழத்தானா, இத்தனைபாடும்!!

பஞ்சத்தால் பதைத்த மக்களைப்பற்றிக் கவலைகொள்ளாது, பஞ்சணையிலே பரிமளவல்லிகளின் பாகுமொழி பருகி, பாதமலர் வருடி, இன்பபுரியில் இடரி விழுந்தவரை, மக்கள் வீழ்த்தி ஜனநாயகத்தை வாழ்த்தின, வரலாற்றுக்குத்தான், பிரன்ச்சுப் புரட்சி, ரஷியப்புரட்சி என்று பெயர். புரட்சிக்கு முன்னர், அவ்விரு நாடுகளிலே போகத்திலே புல்லர்கள் புரண்டதற்கும், இங்கு இன்று,இளித்த வாயரைஏய்த்தும தக்கிறுக்கர்கள், மதோன்மத்தராக வாழ்ந்து, பணம் படைத்தோரையும் துணைகொண்டு நிற்கும் காட்சிக்கும், என்ன வித்தியாசம் காணமுடிகிறது! மெய்சிலிர்க்கிறது, இரத்தம் கொதிக்கிறது, மேதினிபுகழ் அந்த வரலாறுகளைப் படித்தால். என்று மேடை அதிரக்கூறும், மேதினத்தோழர்கள்" இந்தநிலையைக்கண்டும், நாவசைக்க நடுங்குவதைக் காணீர்! கையில் ஊமைகளுடன் வாழும் நிலைக்காகக் கைபிசைந்துகண்ணீர் சொரிந்து, நில்லீர், என்று ஓமகுண்டர்கள் கூறுகின்றனர்.

உழைக்காத, உழைப்பின் பெருமையை உணரமுடியாத, பசியின் கொடுமை தெரியாத, பாதசாரியாய் உலவிக்கால் கடுகடுத்தரியாத,ஆடைக்குஅலையாத, அங்கத்தைவளர்க்க அரும்பாடுபடும் மக்களின் மனைகளிலே மூண்டிடும் மனத்துயர்தனைத் தெரியாத சங்கராச்சாரிகளுக்குச் சந்தர்ப்பணையாம், சன்மானமாம், பாதகாணிக்கையாம்,பிச்சையாம்!! காஞ்சீபுரத்திலே கூடாரமடித்துக், கொட்டுமேளத்துடன், கும்பல்பரிவாரத்துடன், குலநேசத்தைக்காட்டி, குறுகிய மனப்பான்மை யினருக்குக் கடிவாளம் பூட்டிக், குவிக்கிறார்பொருள், கோலாகலமாக, சங்கராச்சாரியார். ஐந்தை ஐம்பதுக்கு விற்ற அருங்குணவான்களும், அருக்கு மங்கையர் மலரடிவருடிட ஆயிரம்தரும் ஆசாபாசத்தின் அடிமைகளும், ஏமாளியும் கோமாளியும் கொட்டிய பொருளால் கட்டிய மாளிகையைக் கடவுள் தந்தவரம் என்று கருதிடும் கண்ணியர்களும், சங்கராச்சாரியாருக்கு—உலகமே மாயை என்று கூறும் உருவுக்கு— அகம் பிரமம் என்றுரைக்கும் விப்பிரருக்கு—பணத்தைப் பக்தியுடன் தந்து பாதநீரை உண்டு பரமானந்தமடைகிறார்கள்!!

எதிரேவரும் ஏழையை ஏறெடுத்தும் பாராத இச்செல்வவான்கள், எட்ட நின்று, தட்டில் பணத்தைக்கொட்டிவிட்டு, மோட்சத்திற்கு முன்பணம் கட்டிவிட்டோம் என்று நினைத்துக்கொள்கின்றனர்! சிறுசெயலும் பெருஞ்செல்வமும் இணைந்த இந்த உருவங்களின் உலாக்காட்சியைக்கண்டு, கையில் ஊமைகள் என்ன செய்ய முடிகிறது. காலத்தின் போக்கையும் மீறிநடக்கும் இக்கொடுஞ்செயல்களைக்கண்டபிறகுமா, கையில் ஊமைகளாகக் காலந்தள்ளுவது!

கையில் ஊமைகளாக மக்கள் உள்ளதற்குக் காரணம், விளக்கமும் திட்டமும் அற்றதும், வீணருக்கு வீரரைப்பலியிடுவதும், ஜாதிபேதத்தைக் கட்டிப்புரளுவதுமாகிய இந்துமதத்தை நாட்டினர் கட்டியழுவதுதான். கான்பூரிலே, சென்ற கிழமை தோழர் N. சிவராஜ் அவர்கள் தலைமையில்கூடிய, எல்லா இந்திய தீண்டாதார் மாநாட்டிலே, பழங்குடி மக்களின் பார்த்திபனும் டாக்டர் அம்பெத்கார், இந்துமதமே நமது இழிநிலைக்கும் இடர்ப்பாடுக்கும் காரணம், அதனை உதறித்தள்ளினால்தான், உரிமை பெறமுடியும், உயர்நிலை அடையமுடியும், என்றுரைத்தார். பழங்குடிமக்கட்கு மட்டுமேயல்ல, திராவிட இனத்துக்கே, விடுதலை மார்க்கம் அதுதான்! கனபாடிகளிடம் நம்மைக்காட்டிக்கொடுப்பதும், நம்மவரைக் கையில் ஊமையராக்குவதும், அந்த இந்துமதந்தான்! இதனை அறியாதார் எதனையும் அறியாதாரே!! நம்மவர் பிறவி ஊமைகளல்ல, பார்ப்பனீயம் வாய்க்குத் தாளிட்டுவிட்டது! கரமின்றிப் பிறந்தவருமல்ல, காதகரின்கட்டுத்திட்டமெனும் தளைகள், தமிழரின் கரங்களைச் செயலற்றதாக்கியுள்ளன, பிறவியிலேயே, கையில் ஊமையரல்ல, பார்ப்பனியத்தை ஏற்றதால், கைகட்டப்பட்டு, வாய்அடைக்கப்பட்டு வதைகின்றனர். ஒரு சீரிய முயற்சிசெய்யின், கையில் ஊமையராக இன்று காணப்படுவோரின், அடிமைத்தனம் ஒழியும், அறிவுடைமை ஓங்கும், மகிழ்ச்சி பொங்கும்! கையில் ஊமையராக் காலந்தள்ளும்வரையிலே, ஓமகுண்டங்கள் இருந்துதீருவது மட்டுமல்ல, அக்குழிகளிலே, நெய்க்குப்பதில் மக்களின் இரத்தமும், விறகுக்குப்பதில் கைகால்களும், போட்டுச்சுடப்பட்டாலும், ஆச்சரியமிருக்கமுடியாது, நரமேதயாகமும்நடத்தியநாடுதானே இது!

## மாஸ்கோ மார்க்கம்!

பகுத்தறிவு மன்றம், பழயமுதலாளியினை நிற்கவைத்து நீதிநல்கிய பூமி, ஓடப்பர் உயரப்பர் எனும் பேதம்போக்கி மக்களை ஒப்பப்பர் ஆக்கிய உயரியஉலகு, சோவியத்குடி அரசக்கூட்டாட்சி, மக்கள் வாழ்விலே வளம்பெற, மாஸ்கோ, மார்க்கம் காட்டிவிட்டது ஆனால், அதனைமனனம் செய்யும் கூட்டத்திலோர் பகுதி, அந்த மார்க்கத்தின் பொருளைச் சரியாகப்புரிந்து கொள்வதில்லை.

இந்திய பூபாகத்திலே, இனவட்டாரங்கள், தனிஅரசுகள், மூன்றேனும் இருத்தல் வேண்டும், மத்யஆட்சி எனும்தொழுமரத்திலே, பலஇனத்தை, ஒன்றைஒன்று நெடுங்காலமாகக் குறைகூறிப் பழக்கப்பட்ட இனங்களை, ஒன்றோடொன்று தழுவிவாழ முடியாதபடி, பேதங்களால் சூழப்பட்டஇனங்களை, மாட்டி, வதைக்க வேண்டாம் திராவிடருக்குத் திராவிடமும், இஸ்லாமியருக்குப்பாகிஸ்தானமும், ஆரியருக்குக் கடைசித்தானமாக ஒருஇடமும்தந்து, தனிஅரசுகள் அமைத்தலே, அறிவுக்குப் பொருத்தம், நீதிக்கு ஏற்றது, என்று பெரியார் இராமசாமியும், ஜனாப் ஜின்னாவும், பேசிடுகின்றனர். மாஸ்கோ மார்க்கத்தை முற்றும்உணர்ந்தார் என்று தம்மைக்கருதிக் கொண்டிருக்கும், முகில்மூடிய மூளையினர், இதுகாறும், சோவியத்ரஷியாவைக் காணீர், அங்குபல்வேறு இனமக்கள் ஒரே ஆட்சியிலே வாழுகின்றனர், அதுபோல, ஏன் இங்கும் இருத்தலாகாது, என்று கூறிவந்தனர். இக்கருத்திலே இருக்கும் தவறை அவர்கள் உணர மறுக்கின்றனர். சோவியத்திலே பலவேறு இனங்கள் இருப்பினும், ஒருஇனத்தின் உழைப்பை மற்றோர் இனம்உறிஞ்சுவதோ, ஒரு இனத்தை மற்றோர் இனம், தாழ்ந்ததாகக்கருதி அதற்கேற்றபடி நடைமுறையில் இருப்பதோ கிடையாது. எனவே, "கூட்டு" அங்கு சாத்தியமாயிற்று. அந்தக்கூட்டும் கூட, உள்நாட்டுத் தனி அரசுகள், உலகுடன் சம்பந்தம் கொள்ளவேண்டிய விஷயத்துக்காக ஒரு மத்திய அமைப்பிலே அங்கம் வகித்திடும் அமைப்பாக மட்டுமே இருந்தது, அத்துடன், சோவியத் குடியரசுகள், எவை வேண்டுமாயினும், எச்சமயத்திலேவேண்டுமாயினும், மத்திய அமைப்பிலிருந்து விலகித், தனித்துவாழ, உரிமை உண்டு. இந்த உண்மைகளை உணரமுடியாமலோ உணர்ந்தும் உரைத்திட மனமில்லாமலோ உரத்தகுரலிலே, சோவியத்தைப் பாரீர், அதுபோல இங்கு ஓர் மத்யக்கூட்டாட்சி இருத்தல் ஆகாதா, கூறீர், என்று கூவினர். அங்கு இல்லாத கொடுமை இங்குண்டு, இனத்தை இனம் வேட்டையாடிய கொடுமை, ஒருஇனம் பிறஇனத்தை இழிமக்கள் என்ற முறையிலே நடத்திவரும் மடைமை. எனவேஇங்கு, பலஇனக் கதம்பம், பலனளிக்காது. இதனைப் பள்ளிகள் நடாத்திப்பொதுஉடைமையைப் பரப்புவதாக மனப்பால் குடிக்கும் குறைமதியினர் உணர்வதில்லை.

இதுபோது, மாஸ்கோ "தனிஅரசுகள் அமைப்பது" எனும் பிரச்சினைக்குப், பளிச்சென ஓர் மார்க்கம் காட்டுகிறது, பழுதில்லா விழியினருக்கும் படும்படி! சோவியத் கூட்டாட்சியிலே உள்ள பதினாறு . குடியரசுகளுக்கும், ஏற்கனவே

(6-ம் பக்கம் பார்க்க.)

## தூண்டில்! எச்சரிக்கை!!

3-ம் பக்கத் தொடர்ச்சி.

கலையழகைக் காணீர், என்றுகூறித் திராவிட இனத்தை மயக்கி, வீரரைக்கோழைகளாக்கி வீழ்த்தினர். அன்று வீழ்த்தியது மட்டுமல்ல, இன்றும், இனி என்றுங்கூட அந்தக்கலை எனும் அங்குசத்தால் திராவிடமெனும் மதகரியை அடக்கலாம், என்ற மனப்பான்மையுடனேயே ஆரிய இனம் இருக்கிறது. அதிலே ஓரளவு உண்மையும் இருக்கிறது.

மாயா உலகைத் துறக்க எண்ணினர் ஓர் மலையாண்டி. காவி அணிந்தார், காடேகினர். கடும்பசிவந்துற்றபோதன்றி கண்திறவார். கடுந்தவம் செய்துவந்தார். ஓர்மாலை, முல்லைமலர்ந்திருக்கக்கண்டார், நறுமணத்தைப்பெற்றார், நன்றுநன்றென நவின்றார். இரவு இறைவனின் திருவருளைவேண்டினர், உறங்கினர். காலையிலே, முல்லைகண்டபக்கம்சென்றார், மலரைக்காணோம்! மகேஸ்வரனைச் சில விநாடி மறந்தார், முல்லையைப்பறித்தது யாரோ, என்ற சிந்தனையில் ஈடுபட்டார். அருகே, காலடிக்குறிகண்டார், சற்றுகோபங்கொண்டார். மாலைவேளையில்கைப்பிடியாகக்கள்ளனைப் பிடிப்போமென்று கருத்துட்கொண்டார்காயமேஇதுபொய்யடாஎன்றார்,கண்மூடினர்கனிமரத்தடியிலே. மாலையில்சென்றார்முல்லைப்புதருக்கு. முழுமதியன்ன முகவதி, முல்லைச் சிரிப்புடன் நின்றிடக் கண்டார், முல்லையைப் பறித்தபடி! "பேசா மலரைப்பறிக்கும் பேசும் மலரே! என்று அழைத்தார். வணங்கினள் வனிதை, வந்தவழிசென்றாள், விழியை அப்பக்கமிருந்து வாங்கிட விரக்திமார்க்க வித்தகருக்கு நெடுநேரமாயிற்று. மறுதினம்மாலை, மங்கைவருமுன்னம், மலரைப் பறித்தார், வந்ததும்வாஞ்சனையுடன் அவளிடம் தந்தார். தருகையிலே, கரத்தோடு கரம்சேரக், கருத்தோடு கருத்துமோதிக்கொண்டது. மறுதினம், காலைமுதல் காடுமுழுதும்சுற்றி. வகைவகையான புஷ்பங்களைப்பறித்தார் துறவி, மாலைநேரத்திலே, முல்லைப் புதருக்கு ஓடோடிவந்தார், முல்லையைக்கொய்தார், என்இன்னம் அந்த இரஞ்சித சுந்தரிவரவில்லை என்று தன்நெஞ்சைக் கேட்டார், மங்கை வந்ததும், "இதோ மல்லிகை, இது முல்லை, செண்பகக்கொத்து, ரோஜா, இதோ செந்தாமரையும் உண்டு காண்" என்று, மலர்க்குவியலைக்காட்டினர். "மகானே! இந்த மங்கையின் பொருட்டு இவ்வளவு சிரமமா?" என்று கேட்டாள் மங்கை. அன்று அந்தமது உண்டதால் புதிய உற்சாகம்பெற்ற நீறுபூசி, நீற்றையும் நிகண்டையும், நித்யபூஜையையும் நிஷ்டையையும் துறந்தார், மலர்பறித்திடவும் மாலைதொடுத்திடவும், மங்கையைக் கண்டிடவும் மலர் தந்திடவுமே அவருக்கு, நேரமும் நினைப்பும் இருந்தது. இந்த 'சக்தி' பூஜையின் பயனாக, அவர் சன்யாச ஆஸ்ரமத்திலிருந்துகிரஹஸ்தாஸ்ரமம்புகுந்து, மாயஉலக பந்தம் வேண்டேன் என்ற மனனத்தைத்துறந்து மனையறம் படித்து, அந்த ஊரிலேயே, முதல் தரமான புஷ்பம் விற்பவரானர், என்றோர் கதை உண்டு. கலை, இங்குள்ள நிலையிலே, அதிலே, இலயிப்பவர் கதியும், மலையாண்டி மனையாண்டியானது போலத்தான் முடிகிறது, என்றுநான் எண்ணுகிறேன். கலாரசிகராகத் தொடங்கும் வாழ்க்கை, கனபாடியின் தோழராக்கி, பக்தராக்கி, ஆரிய அடிமையாக்கி விடுகிறது. அந்தவிதத்திலே, கலை அமைந்திருக்கிறது. சங்க நூற்களிலேயுங்கூட சந்து கண்ட இடங்களிலே வந்து நுழைந்து கொண்டது ஆரியம். கடைச் சங்கத்திற்குப்பிறகோ எனில், ஆரியக் கருத்தே உட்பொருளாகவும், கலையே கவசமாகவும் அமைந்த நூற்கள் பெருகிவிட்டன. சங்கநூற்களிலே, யானை அலறக்கேட்டு அஞ்சிய தலைமகளை, அஞ்சற்க என்று கூறி ஆதரித்ததலைமகனைக் காண்கிறோம், பிறகோ, அண்ணனை ஆனையாக்கியனுப்பி வள்ளியைப் பயமுறுத்தி மணம்புரியும் வேலன்கதை வீடுதோறும் புகுந்ததுகாண்கிறோம். சங்கநூற் சித்திரம் சிலருக்கே தெரியும், புராணக்குப்பையோ, தெரியாதார் மிகமிகச் சிலரே.

சங்கநூற்களிலே, மந்திக்குக் கனி பறித்தீயும் காதற்கடுவனைப் பற்றிய சித்திரம் காண்கிறோம். பிறகோ, சஞ்சீவி பர்வதத்தைப் பெயர்த்தெடுக்கும் சர்வ பண்டிதனும் அனுமனைக் காண்கிறோம், உண்மைஉவமையைஉரைத்த உயர்நூலை அறிந்தோர்சொற்பம், புராணப்புளுகைப் போற்றிடுவோரோ, பெருந்தொகையினர். ஆண்யான், பெண்மானுக்குத்துணை நிற்கும் அழகிய காதலறத்தைக் காட்சியாக்கிய கவிதைபடித்ததமிழனுக்கு, மாரிசனின் மாயமான் கதை கலையாக்கப் பட்டுவிட்டது! முல்லை, குறிஞ்சி,நெய்தல் மருதம், பாலை, எனும் நிலப்பண்பு தெரிந்து இன்புற்ற இயல்பு முன்பு! பிறகோ, நாலுவர்ணமெனும் நச்சுப் பொய்கையில் நெளியும் நிலைமை!! கலையின்பேரால், ஆரியக்கற்பனைகள், தமிழரின் கருத்திலே தூவப்பட்டுவிட்டது. இதனை நன்கறிந்தே சுதேசமித்திரன், கலையனர்ப்பெறப், பண்டைய காப்பியங்களைப் படித்திடட்டும், சர். சண்முகம், அதன்மூலமாகவே அவரை முறியடிக்க முடியும்" என்று கருதுகிறது. முடியுடை வேந்தரையும் வீரரையும் வீழ்த்தியமுறை அதுவன்றோ, சர். சண்முகம் மட்டும் என்ன தப்பாவா போகிறார், என்று மித்திரன் கருதுகிறது. நறுமலர்க் கூடையிலே, நச்சரவு இருந்திடின், மலர்தேடும் கையிலே, விஷப்பல்லன்றோ தீண்டும்! பழய காப்பியத்திலே பிரேமை அதிகரித்தால், திராவிடப்பண்பு பாழ்ப்படவழி இருக்கிறது, என்பதறிந்தே, சுதேசமித்திரன் அந்தச்சொல்லை வீசியிருக்கிறது. உண்மையிலேயே, சர். சண்முகம், கலையின் மேம்பாட்டினைச் சுவைக்கக் காப்பியக் கடலிலே மூழ்கிடுவதை நான் தடுக்கவில்லை, ஆனல், அக்கடலிலே, ஆரியஅலை மோதுகிறது, சனதனமெனும் சுறுமீன்கள் உலவுகின்றன, வர்ணாஸ்ரமம் எனும் வாயகன்ற திமிங்கிலமுளது, என்று எச்சரிக்கை செய்யாவிடின், எனக்கு அவர்பால் உள்ளஅன்பினை மறந்தவனாவேன். கலையுலகிலே, அவர் உலவுவது, ஆரிய புரிக்கு அவரை அழைத்துச்செல்லாதிருக்கவேண்டும். கலையார்வத்திலே ஈடுபட்டு, ஆரியராவது திராவிடராவது, என்று கூறிடும் முத்தராங்கமாகவோ, இகலோகத்தைப்பற்றி இவ்வளவு கவலைப்பட்டுக் கிடப்பானேன் பரலோகத்தைப்பற்றியன்றோ சிந்தனை செயல் வேண்டும் என்று கூறிடும் பாராயண பக்தராகவோ, மாறிடாதிருக்கவேண்டும்.

## மாஸ்கோ மார்க்கம்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள உள்நாட்டுச் சுதந்திரமும், பிரிந்து போகும் உரிமையும் இருப்பதுடன், இப்போது, பிறிதொருஉரிமை, தனிஅரசுத் தன்மை, தரப்பட்டுவிட்டது. தோழர் மலடோவ், இதுபற்றிய தீர்மானமொன்றைச், சோவியத்பொது அமைப்பு மன்றத்திலே, நிறைவேற்றினர். "சோவியத்யூனியனின் குடிஅரசுகள், அயல் நாடுகளுடன் சுதந்திரநாட்டுறவு கொள்ளக்கூடியவையாக இருக்கவேண்டும், ஒவ்வொரு சோவியத் குடியரசுக்கும் சுதந்திர இராணுவத்தொகுதி இருக்க வேண்டும்" என்று மலடோவ் கூறினர். மன்றத்திலே ஒருமனமாக, இச்சீரிய முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. வெளி நாட்டுத்தொடர்பு, உள்நாட்டு இராணுவம், எனும், அடிப்படையான துறையிலேயும், தனி உரிமை பெற்றுவிட்டால், அவைகளைத் தனிஅரசு என்றுகூற, யார் மறுக்கமுடியும்! இந்த இருதுறைபற்றித் தான் இங்கு, நிபுணர்களின் நாப்பறை அதிகம்! படைபலம் சிதறலாமா, பாதுகாப்புக்காக இந்தியா ஒரு தேசமாக இருக்கவேண்டாமா, வெளிநாட்டாருடன் தொடர்புகொள்கையிலே, பிளவுபட்ட இந்தியா பயன்தராதே, முழுஇந்தியாவைத்தானே மதித்திடுவர், என்று இங்கு நிபுணர்கள் கூறினர். இந்தவாதத்தை மாஸ்கோ வீழ்த்திவிட்டது. பொதுஉடைமை எனும் ஒரே இலட்சியத்தால் இணைக்கப்பட்டு, இனப்பகையும் இழிசெயலுமின்றி, உள்ளசோவியத் குடியரசுகளுக்கே, தனி இராணுவம் அமைத்துக் கொண்டு, தனி வெளிநாட்டிலாகா ஏற்படுத்திக்கொண்டு, துரைத்தனம்நடத்த உரிமை வழங்கப்படுகிறது என்றால், ஜாதி, மதம், இனம், இயல்பு, என்ற எல்லாவகையாலும் பிளவுபட்டு, நகைமுகங்காட்டும்போதும் பகைஉளம் கொண்டுள்ள பல்வேறு இனமக்களை, இந்தியஅரசுஎனும் ஒரேபட்டியிலே போட்டுஅடைப்பது, அறிவுடைமையா என்று எண்ணிப்பார்க்கவேண்டுகிறோம்.

# ஜப்பானுக்கு ஜெர்மன்-தூபம்.

பேர்ள் ஹார்பரைத் தாக்கியது போலவே ரஷ்யாவையும் தாக்கும்படி பெர்லின் ராஜதந்திரிகள் ஜப்பானைத் தூண்டிக் கொண்டிருப்பதாக டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் இஸ்தாம்பூல் நிருபர் எழுதுகிறார். ஜப்பானியர் திடீரென்று ரஷ்யாவைத் தாக்குவது ஒன்றின் மூலம் தான் ரஷ்யாவில் தம்படைகள் அழிந்து போவதைத் தடுக்கமுடியும் என்று ஹிட்லர் நினைப்பதாகத் தெரிகிறது. ஜப்பானியர் இப்பொழுது உடனேயே தாக்கா விட்டால், ரஷ்யா அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் சேர்ந்துகொண்டு ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் உயிர் நாடியின் மீது பாய்ந்துவிடுமென்ற பீதியை ஜப்பானியரிடையே உண்டு பண்ணுவதற்கு ஹிட்லர் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

மேற்கில் இரண்டாவது போர்முனை ஆரம்பிக்கப்பட்டவுடன், தூரக்கிழக்கில் தாக்குதலை ஆரம்பிக்க ஸ்டாலின் ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று பெர்லினிலுள்ள ஜப்பானிய தூதுவர் ஜெனரல் ஒஷிமாவை ஜெர்மன் வெளிநாட்டுக் காரியாலயம் எச்சரிக்கை செய்தது. இந்தத்திட்டம்தான் டெஹெரானில் முடிக்கப்பட்ட பேரம் என்பது பெர்லின் திரிக்கும் சாடு.

வ்ளாடிவாஸ்டாக்மீது ஒரு மின்னல் தாக்குதல் நடத்தும்படி ஜப்பானைத் தூண்டிவிட்டு கடைசியாக ஒரு கை பார்த்துவிடுவது என்பதுதான் ஹிட்லர் இதற்கு அளிக்கும் பதில். ஆனால், ரஷ்யாவின் பிரமாண்டமான தளமும், தொலை கிழக்கின் கடல் ஸ்தலமும் பல வருஷங்களாகப் பலப்படுத்தப்பட்டு இப்பொழுது தயாராக இருக்கின்றன.

ரஷ்யாவுடன் இருந்துவரும் நடுநிலைமை மனப்பான்மையை முறித்துக் கொள்ள ஜப்பானுக்கு இஷ்டமேயில்லை என்பதும்கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிகிறது. தற்பொழுது உள்ள நடுநிலைமை உறவையே தொடர்ந்து வைத்துக்கொள்ள ஜப்பானியர் விரும்புகிறார்கள் என்பதற்கு சரியான அத்தாட்சிகள் இருக்கின்றன. சென்ற சில வாரங்களில், துருப்புகளின் நடமாட்டம், எண்ணிக்கை ஆகியவைகளைப் பற்றி ரஷ்ய ராணுவத் தலைமைக்கு மிகமுக்கியமான தகவல்களை ஜப்பானிய ராஜதந்திரிகள் ரஷ்ய ராஜதந்திரிகளுக்கு அளிக்கவும் தயங்கவில்லை. இது ரஷ்யாவுக்கு மிக்க அனுகூலம் விளைத்திருக்கிறது.

தூரக்கிழக்கு யுத்தம் ஆரம்பித்தமுதல் ஆறு மாதங்களில் கைப்பற்றிய பிரதேசத்தில் ஒரு பாகத்தையேனும் கைவிட்டு விடாமல் வைத்துக்கொள்ள வேண்டுமானால், வெளிக்காவல் ஸ்தலம் ஒவ்வொன்றிலும் கடுமையாகப் போராடுவது ஒன்றுதான் வழி என்று ஜப்பான் நம்பிக்கொண்டிருக்கிறது. 1942-ம் வருஷ இலையுதிர் காலத்துக்குப் பிறகு ஜப்பானிய ராணுவதந்திரமும் இந்நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டே வகுக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானிய பிரதமஸ்தலத்துக்கேயோ அல்லது அதன் அருகில் கைப்பற்றப்பட்டுள்ள ஸ்தலங்களுக்கோ நேரடியான ஆபத்து ஏற்படுவதற்கு முன்னால், எதிரிகள் யுத்தக்களைப்பினால் மனமுடைந்து சமாதானத்தை நாடுவார்கள் என்று ஜப்பான் எதிர்பார்க்கிறது. ஆனால், ஜப்பானின் நெருக்கமான தொழில் பிரதேசங்களின்மீது குண்டு வீசுவதற்கு ஸைபீரியாவிலுள்ள விமானதளங்களை ரஷ்யர் நேசநாடுகளுக்குக் கொடுத்துவிட்டால், ஜப்பானின் வெளித்தற்காப்புத் திட்டம் குலைந்துவிடும்.


## விளம்பரம்.

செங்கற்பட்டு ஜில்லாபோர்டுக்கு 1944-45 ஆண்டிற்குரிய ஸ்டேஷனரி சாமான்கள் சப்ளை செய்யவும், அச்சுவேலை செய்துகொடுக்கவும் டெண்டர்கள் கோரப்படுகிறது.

அச்சு வேலைக்குரிய விவரங்கள், ஸ்டேஷனரி சாமான்கள் சப்ளை செய்யவேண்டிய விவரங்கள் வேண்டுவோர்கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்துக்கொள்ள வேண்டும்.

டெண்டர்கள் தனித்தனியாக அதற்கான பாரங்களில் பூர்த்தி செய்து அனுப்பப்படவேண்டும்.

செங்கற்பட்டு ஜில்லாபோர்டு ஆபீஸ், 25-1-1944.

T. சண்முகம் பிள்ளை,
தலைவர்,
செங்கற்பட்டு ஜில்லா போர்டு.


## லெனின் நாள்.

21—1—44ல், காஞ்சீபுரம் திராவிடர் கழகத்தார், லெனின் நாளை, உற்சாகத்துடன் கொண்டாடினர். தேனீர் விருந்துக்குப் பிறகு, கழகக்கட்டிடத்தில், தோழர் K. S. முனுசாமி அவர்கள் தலைமையில், லெனின் வாழ்க்கைபற்றி, தோழர்கள் ஈழத்தடிகள், வெங்கடராமன், அண்ணாமலை, சீனுவாசன், T. P. S. பொன்னப்பா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## கோபி.

17–1–44 மாலை, கோபிசெட்டிபாளையத்தில், தோழர் N. அர்ஜுனன் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, காஞ்சீபுரம் சீனுவாசன், அண்ணாதுரை ஆகியோர் பேசினர்.

## பராங்குசம்—சத்யபாமா திருமணம்

பொன்மலை திராவிட வாலிபர்கழகச் செயலாளர் தோழர் பராங்குசத்திற்கும் அறந்தாங்கி தோழியர் சத்யபாமா அம்மையாருக்கும், 28—1—44 காலை, பொன்மலையில், தோழர் அண்ணாதுரை தலைமையில் சீர்திருத்தத்திருமணம் சிறப்புற நடந்தேறியது. தோழர்கள் ரங்கராஜு, T.P.ஆறுமுகம்,கிருஷ்ணனந்தா, சீனுவாசன், அண்ணாதுரை ஆகியோர் வாழ்க்கைத்துணைபற்றிப் பேசினர். பிற்பகலில் ஒரு தேனீர் விருந்து நடைபெற்றது.

### பொதுக்கூட்டம்.

அன்றுமாலை, தோழர் T. P. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் T. P. வேதாச்சலம், C. N. அண்ணாதுரை ஆகியோர் யுத்தமும் நமது கடமையும் எனும் பொருள்பற்றிப் பேசினர்.

## 7000 சுவாஹா!

சென்னை, பிரிசிடென்சி காலேஜ், கிளர்க் P. G. இராமனாத ஐயர் என்பவர் 7000 ரூபாய் மோசடி செய்ததாக, சென்ற ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டார்.

## சிதம்பரம் சந்தாதார்களுக்கு

திராவிட நாடு வாங்கி ஆதரிக்கும் அன்பர்கள் பலர் கற்றறிந்தவர்களாயிருந்தும் சந்தாவை சேர்ப்பிக்காததால் ஏஜண்டு சேரவேண்டிய நிலுவைப்பட்டி அளவு மீறி நிற்கிறது என்பதை காணுமாறும்—ஜனவரி முடிவுடனாவது பாக்கியை நேர் செய்யுமாறும் வேண்டப்படுகிறார்கள்.

ஏஜண்டு.

# நூல் நயம் யாருக்கு?

(கோட்டாறு, கணபதி)

இப்பொழுது நமது நாட்டின்கண் புராணப் பண்டிதர்கள் பொய்மை நிறைந்த புராணங்களினின்று ஆங்காங்கு தமது பகுத்தறிவற்ற, நூலறிவிற்கு நல்லவையெனத் தோன்றிய சிற்சிலக்கருத்துக்களை, நூல் நயங்களைப் பொறுக்கித் தொகுத்து அதன் உட்பொருளை விவரித்து விளக்கம் செய்கின்றனர்.

இற்றைநாள் தமிழ் நாட்டிலுள்ள நூற்றுக்கு இருபதுபேர்கள் பட்டினியால் பதறுகின்றனர். இருபதுபேர்கள் தன்னலமேபொன்னிறைவாய்க்கொண்டவர்கள், நாற்பதுபேர்கள் "பொது வாழ்வு" எனப்பெயர் வைத்துக்கொண்டு அப்பொதுவாழ்வின் சார்பாகத் தங்கள் சுயநலத்திற்குப்பாடுபடுகிறார்கள். இருபது பேர்களே தகைமைசான்றபொதுவாழ்வு மேம்பட-தனிவாழ்வு அறுபடதயக்க மற்ற முயற்சிசெய்து வருகிறார்கள், அவர்களே எம்போன்ற தோழர்களும் அறிஞர்களும் நிரம்பிய "தன்மான இயக்கம்" என்பது.

நாங்கள் அப்புளுகுகள் நிறைந்தபுராணங்களை மக்களுக்கு இங்ஙனம் விளக்கிப் புகுத்துவது நமது முன்னேற்றத்திற்குத் தடைசெய்வதாகும், அவைகளை பொசுக்க வேண்டுமென்றுசொன்னால் அத்தன்னலங்கொழுமியவர்கள் சிறிதும் பொருட்படுத்தாது இன்னும் விரிவுரையும் அதற்கு விளக்கவுரைகளும் விரைந்து சொல்லியும் தம்நேரத்தை வீணாக்குகின்றனர். பாராட்டும் நூல்நயங்கள் மக்கள் உயிர்வாழ்க்கைப், போராட்டத்தூடு புகாஎனப் புதுமைக்குறளாசிரியர் புகன்றதற்கிணங்க, மக்களது வாழ்க்கைப் போராட்டத்தில் இந்நூல் நயங்கள் எத்திறனைக்காட்டமுடியும்? "திருக்குறள்" "சங்கநூற்கள்" இவற்றை நாம் குறைகூறவில்லை. இவைகளையும் நாம் சுவைக்க வேண்டிய சமயம் இப்பொழுதன்று. சுவைக்கக்கூடிய சமயம் ஒன்றுண்டு. அது விரைவில் எய்துமென்பது திண்ணம். அச்சமயம் எதுவென்றால் மக்களெல்லாம் பிறப்புயர்வு தாழ்வுகளைவிடுத்து யாவரும் ஒன்றெனக்கொண்டு பெண்களுக்குச் சரிஉரிமைகொடுத்து, அனேக குழந்தைகள் பாலின்றியும் தாய்கள் உணவின்றியும் வருந்தும் இப்பொழுது குடம் குடமாகப் பாலால் முழுகிக்கொண்டிருக்கும் கல்லுருவங்கள் நிறைந்த கோயில்களெல்லாம் உயர்நிலைப்பள்ளிகளாயும் தொழில் நிலங்களாகவும் மாறிமக்கள்யாரும் சரியொத்த வாழ்க்கை நடத்தும் பொதுவுடைமை வாழ்வு, எய்தும் சமயமேயாம். இப்பொழுது பல வகுப்புப்பிரிவினைகளும் அவைகளுக்கிடையே ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொருவித இன்னலும் இயங்கிக்கொண்டிருக்கும்பொழுது 'நூல்நயங்கள்' யாருக்காகவெனக் கேட்கின்றோம்.

—

## மலைக்கோட்டை திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்.

29—1—44 மாலை திருச்சி டவுன் ஹால் மைதானத்தில், தோழர் T. P. வேதாச்சலம் அவர்கள் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது. "புது உலகில் நமது நிலை" எனும் பொருள்பற்றித் தோழர் C. N. அண்ணாத்துரை பேசினார்.

---

சென்னையில்

13—2—44ல்

ஜஸ்டிஸ் மாநாடு நடைபெறும்.

விவரம் பிறகு.


புராணம்கண்டு களைத்தீர்கள்! பழமை கண்டுசலித்தீர்கள்!

இதோ புதுமை விருந்து!

ஆரியப்புரட்டு! மடத்தலைவர்கள் லீலை! தமிழர் தவிப்பு!

ரசவாத மோசடி! புரோகிதப்பித்தலாட்டம்!

ஆகியவைகளை விளக்கும்

அறிவுவளர்ச்சி நாடகம்!

சந்திரோதயம்

சென்னை வி. பி. ஹாலில் 27-2-44 மாலை

நடைபெறும்.

[திருவத்திபுரம், திருச்சி, தில்லை, ஈரோடு, ஆகிய இடங்களிலே தோழர்கள் கண்டுகளித்தனர். சென்னைத் தோழர்களே! காணத்தவறாதீர்கள்!! காதுக்கும் கண்ணுக்கும்மட்டுமல்ல விருந்து, கருத்துக்கு விருந்து, ஆரியமெனும் நோயை ஓட்டும் மருந்து]

டிக்கட் விவரம்-ரூபா 5, 3, 2, 1.

கிடைக்குமிடங்கள்

K. P. சாமி,
நெ-20 தனுக்கன் தோட்டம்,
3-வது சந்து,
இராயபுரம், சென்னை.

C. K. வைத்திய லிங்கம்,
எண்ணெய் மண்டி,
142, ஆதியப்ப நாயகன் தெரு,
ஜி. டி." சென்னை.

தோழர்கள்.

C. N. அண்ணாத்துரை.
C. V. M. அண்ணாமலை,
C. V. இராஜகோபால்,
போளூர் சுப்பிரமணியன்,
T. P. S. பொன்னப்பன்,
ஈழத்தடிகள்,
கோவிந்தராஜன்,
சீனுவாசன்,
வெங்கட்ருமன், சாமிநாதன்,
பார்த்தசாரதி,
நாராயணசாமி,

ஆகிய இயக்கத்தோழர்கள் பலர் நடிக்கின்றனர்.

ஆர்மோனியம்—சண்முகானந்தா,

தபேலா—ஆபீலா.

கதைதீட்டியவர்,
C. N. அண்ணாத்துரை,

காஞ்சி
திராவிட நடிகர் கழகத்தார்.


Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.